உதவிப் பிரதமரும், அதில் இருக்கிற பெரிய தலைவர்களும் திட்டமிட்டு நம்முடைய நாட்டில் இந்த இயந்திரத்தைப் புகுத்தி விட்டார்கள். இந்த இயந்திரத் திணிப்பு சம்பந்தமாக திரு. காட்கில் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வளர்ச்சி பெற்ற நாடுகளிலெல்லாம் இந்தத் திட்டம் திணிக்கப்படுவதற்கு முன்னால் பரிசீலனை செய்யப்படுகிறது. நம்முடைய இந்திய துணைக்கண்டத்தில் அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லை என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இயந்திரம் திணிக்கப்படுவதன் மூலம் ஏராளமான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புப் போய்விடுகிறது. யாரையும் வேலையை விட்டு வெளியே போகச் சொல்லவில்லையே என்று இதற்கு ஒரு காரணம் சொல்கிறார்கள். இந்த இயந்திரம் திணிக்கப்படுவதால் யாருக்கும் பாதகம் வந்துவிடாது என்று சொல்கிறார்கள். ஆனால், நடைமுறையில் இருக்கக்கூடிய நிலைமை என்ன? இந்த இயந்திரம் திணிக்கப்படுவதன் காரணமாக இன்றைக்கு இந்தத் துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குக் கிடைக்கவேண்டிய பதவி உயர்வு கிடைக்காமல் பாதிக்கப்படுவார்கள் என்பதை யாரும் மறந்துவிடுவதற்கு இல்லை. அதைப் போல இந்த இயந்திரம் திணிக்கப்படுவதினால் எதிர்காலத்தில் பெரும் அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வரும் என்பதை நாம் மிகத் தெளிவாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல. இன்றைக்கு இந்த இயந்திரம் திணிக்கப்படக்கூடாது என்பதற்காக பல்வேறு காரணங்களை நம்முடைய நாட்டிலே இருக்கிற பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருந்தும், அதை விட்டு விட்டு, மத்திய அரசில் இருப்பவர்கள் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். அதனால் பெரிய முதலாளிகளும், பல எண்ணெய் கம்பெனிகளும் பல்வேறு துறைகளிலே இந்த மின் அணு இயந்திரங்களை திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட மின்அணு இயந்திரங்கள் திணிக்கப்படக்கூடாது. அதை எதிர்த்தே தீருவது என்ற உறுதியான எண்ணத்திலே நமது அரசு இருக்கிறது. ஆகவே, இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை தி.மு.க.வின் சார்பிலே, இங்கே வெற்றி பெற்று வீற்றிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலே, அமைச்சரவையின் சார்பிலே இந்த இயக்கத்தின் சார்பிலே நாங்கள் ஆதரிக்கிறோம். இந்திய துணைக்கண்டத்தில் இந்த இயந்திரம் திணிக்கப்படக்கூடாது என்பதிலே உறுதியான நம்பிக்கை உண்டு இந்த அரசாங்கத்திற்கு என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து, எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*184. Notification issued with G.O. Ms. No. 2989, Home, dated the 31st October 1967, in regard to exemption from payment of tax under the Madras Motor Vehicles (Taxation of Passengers and Goods) Act, 1952 in respect of certain stage carriages belonging to Andhra Pradesh State Road Transport Corporation, Hyderabad plying on the route Madras to Thirupathi on temporary permits. [*Laid on the Table of the House under section* 16 (5) *of the Madras Motor Vehicles* (*Taxation of Passengers and Goods*) *Act*, 1952 (*Madras Act XVI of* 1952).]

B. Reports, Notifications and other papers.

Nil.

---

*Laid on the Table of the House on 28th August 1968